**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.12
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | அன்னலெட்சுமி | -- | |
| Father's Name | முத்தையா | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of December 2025.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் மதுரை மாவட்டம், வில்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018ம் ஆண்டு மம்சாபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 07.06.2018ம் தேதி காலை 09.15 மணிக்கு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தகவலின் பேரில் நேரில் சென்று வாகன விபத்தில் காயமடைந்து உள்நோயாளியாக இருந்த திருவில்லிபுத்தூர் அய்யம்பட்டி தெருவைச் சேர்ந்த சுந்தரபாண்டியன் மகன் சுந்தர்(எ) சுந்தர்ராஜ் மற்றும் அதே தெருவைச் சேர்ந்த குருசாமி மகன் கல்யாணகுமார் ஆகியோர்களை பார்த்தபோது கல்யாணகுமார் மயங்கிய நிலையில் இருந்ததால் சுயநினைவில் இருந்த சுந்தர் (எ) சுந்தர்ராஜ் விசாரித்தபோது தானும் கல்யாணகுமார் மற்றும் மதுரை ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரின் மகன் மாயாண்டி (எ) பிதுன்குமார் ஆகியோரும் திருவில்லிபுத்தூர் பஸ் நிலையத்தில் உள்ள ஆதிரை சூப்பர் பஜார் கடையில் வேலை செய்து வருவதாகவும் தாங்கள் மூவரும் 07.06.2018ம் தேதி காலை திருவில்லிபுத்தூரில் இருந்து செண்பகத்தோப்புக்கு கல்யாணகுமாருக்குச் சொந்தமான இருசக்கர வாகனம் TN58AV1580 என்ற Hero வாகனத்தில் குளிக்கச் சென்றுவிட்டு திரும்ப மேற்கிலிருந்து கிழக்குநோக்கி திருவில்லிபுத்தூர் வருவதற்காக சுமார்

08.30 மணியளவில் மாயாண்டி இருசக்கர வாகனத்தை ஓட்ட அவருக்குப் பின்னால் சுந்தரும், கல்யாணகுமாரும் அமர்ந்து கொண்டு வந்ததாகவும் அப்போது கிழக்கிலிருந்து மேற்குநோக்கி கனிமாத்தேவர் தோப்பு அருகில் வந்தபோது TN67AQ2518 என்ற டிராக்டருடன் கூடிய ட்ரெய்லருடன் வந்த பின்னால் பெயர் விலாசம் தெரிந்த திருவில்லிபுத்தூர் கோட்டைப்பட்டியைச் சேர்ந்த பொன்னுச்சாமி மகன் பொன்ராஜ் என்பவர் டிராக்டரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் எங்களது இருசக்கர வாகனத்தில் மோதியதால் நாங்கள் மூவரும் டுவிலரோடு தெற்குப் பக்கமும் டிராக்டர் ரோட்டின் வடக்குப்பக்கமும் உள்ள பள்ளத்தில் விழுந்துவிட்டோம். இதில் அந்த இடத்திலேயே மாயாண்டி (எ) பிதுன்குமார் இறந்துவிட்டார். எனது வலது இடுப்பு பக்கம் பயங்கர வலியும், கல்யாணகுமாருக்கு தலையில் பலத்த இரத்தக்காயமும் வலது காலில் எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தது. கல்யாண குமார் மயங்கிவிட்டார். அப்போது அந்த வழியாக காட்டிற்கு செல்பவர்கள் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி எங்களை 108 ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும், கல்யாணகுமாரும் சிகிச்சையில் இருந்தபோது அரசு மருத்துவமனை திருவில்லிபுத்தூருக்கு வந்த சார்பு ஆய்வாளரான என்னிடம் சுயநினைவில் இருந்த சுந்தர் கொடுத்த வாக்குமூலத்தில் விபத்து நடந்தது பற்றியும், விபத்து ஏற்பட காரணமாக இருந்த பொன்ராஜ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க கொடுத்த புகார் மனுவை பெற்று 07.06.2018 ம் தேதி சுமார் 10.30 மணிக்கு நிலையம் வந்தேன். மேற்படி வாகன விபத்தை பற்றி திருவில்லிபுத்தூர் நகர் வட்டம் (பொறுப்பு) குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் தெரிவித்துவிட்டு விபத்து ஏற்படுத்திய திருவில்லிபுத்தூர், கோட்டைப்பட்டியைச் சேர்ந்த பொன்னுச்சாமி மகன் பொன்ராஜ் என்பவர் மீது மம்சாபுரம் காவல் நிலைய குற்ற எண். 105/2018 பிரிவுகள் 279,337,338,304(a) IPC யாக வழக்கு பதிவு செய்து வழக்கை காவல் ஆய்வாளர் மேல்விசாரணைக்கு வைத்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் காலை 08.30 மணிக்கு நடந்தது, எங்கள் நிலையத்திற்கு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து காலை 09.15 மணிக்கு தகவல் வரப்பட்டது. திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில்

இருந்து நேரடியாக சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தந்துவிடுவார்கள். காவல் நிலை ஆணைப்படி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து அருகிலுள்ள நகர் காவல் நிலையத்திற்குத்தான் தகவல் கொடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்கண்டவாறு எனக்கு தகவல் கிடைத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தகவல் கிடைத்தவுடன் நேரடியாக திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்குதான் சென்றேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of December 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2025.12.17 14:51:09 -0400

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**